REGISTRAR OF NEWSPAPER FOR INDIA TNBIL / 2005 / 15261 R.Dis no.1834/04 Date of Publication : 1st Week of Every Month **4 Pages** பக்கம் 1

# CVPA NEWS

A Monthly Newspaper (Tamil & English) for Video & Photographic Professionals

AN OFFICIAL NEWS MAGAZINE FROM CHENNAI VIDEO & PHOTOGRAPHER'S ASSOCIATION

Film - 16 Click - 11
FEBRUARY 2021 Re. 1

SK VIDEO Studio



HD VIDEO -HD EDITING
FULL HD MIXING
JIMMYJIB AND HELICAM
BLUERAY DVD CONVERSION
CANDIT PHOTOGRAPHY



P4 WATER PROOF LED WALL ALL SIZES
எஸ்.கே. வீடியோ ஸ்டுடியோ
1/1. VENKATACHALAM STREET, PURASAWALKAM, CHENNAI - 600 007
PHONE: 044-43328451- 9940555202- skvideoseenu@gmail.com

## HEIF FILE FORMAT

இப்போது வெளிவந்து கொண்டிருக்கும் பெரும்பாலான மிரர் லெஸ் கேமராக்களில் உள்ள மெனு செட்டிங்கில் RAW, JPEG போன்ற பைல் பார்மெட் களுடன் HEIF ( HIGH EFFICIENCY IMAGE FILE FORMAT) எனும் புதிய கோடக் பைல் பார்மட்டை பயன்பாட்டுக்கு கொண்டு வந்துள்ளனர்.

30 ஆண்டுகளுக்கு முன்பாக Moving Picture Experts Group என்கிற சர்வதேச தொழில்நுட்ப தரக்கட்டுப்பாடு ஆய்வுக்குழு அன்றைய காலகட்டத்தின் தொழில் நுட்பத்திற்கு தேவையாக கருதப்பட்ட JPEG எனும் பைல் பார்மட் ஐ பயன்பாட்டிற்கு கொண்டு வந்தனர். இன்றும் கூட இந்த HEIF பைல் பார்மட் பயன்பாட்டில் தான் உள்ளது.

தற்போது JPEG பைல் பார்மேட்டுக்கு மாற்றாக இன்றைய தொழில்நுட்பத்திற்கு ஏற்றவாறு HEIF என்கிற புதிய கொடாக் பைல் பார்மட்டை பயன்பாட்டிற்கு கொண்டு வந்துள்ளனர். 2015ஆம் ஆண்டு இந்த பைல் பார்மட் நடைமுறைக்கு கொண்டு வந்து விட்டாலும், இந்த பைல் பார்மட்டை சப்போர்ட் செய்யும் அளவிற்கு அன்றைய ஹார்டுவேர் சாஃப்ட்வேர் இல்லை. ஆனால் இன்றைய தொழில் நுட்பத்திற்கு இந்த பைல் பார்மட் அவசியமான ஒன்றாக மாறியுள்ளது.

இந்த புதிய HEIF பைல் பார்மேட்டானது, JPEG பைல் பார்மெட்டுகளை காட்டிலும் மிகக் குறைந்த அளவில் படச் சுருக்கத்தை (இமேஜ் கம்பிரஷன்) செய்து, ஸ்டோரேஜில் அதிகமான ஸ்பேஸ் கிடைக்க வழிவகை செய்து கொடுக்கிறது. மேலும் இமேஜ்களை எடிட் செய்யும் போது JPEG ஐ விட கூடுதலாக வண்ணம் சேர்க்க இந்த புதிய HEIF பைல் பார்மட் உதவுகிறது.

## HEVC

தற்போது HEVC (High Efficiency Video Coding ) எனப்படும் H. 265 எனும் புதிய HEVC பயன்பாட்டிற்கு வந்துள்ளது. பொதுவாக கொடக் என்பது, Compression மற்றும் De Compression என்கிற முதல் எழுத்தின் சுருக்கமே Codec எனச் சொல்லப்படுகிறது. இதையே சிலர் Coder அல்லது De Coder என்றும் கூறுகின்றனர். இந்த பைல் பார்மட் டானது முழுக்க முழுக்க வீடியோவிற்காக உருவாக்கப்பட்டுள்ளது. குறிப்பாக இன்றைய 4k வீடியோவை கருத்தில் கொண்டுதான் இந்த கொடக் உருவாக்கப்பட்டுள்ளது.

HD வீடியோவிற்காக 2003 ல் H. 264 என்கிற கோடக் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. இப்போது வெளிவந்திருக்கும் H. 265 எனும் புதிய கொடக்கானது, 4K வீடியோ போன்ற பெரிய அளவிலான பைல்களை, தரம் குறையாமல் மிக சிறிய அளவில் பைல்களை சுருக்கி வைக்க உதவுகிறது. இதனால் H. 264 விட H.265 ல் சேமிப்பு அளவு பாதியாக குறைகிறது. இதனால் இன்றைய 4k வீடியோக்களுக்கு ஸ்டோரேஜ் ஸ்பேஸ் அதிகமாக கிடைக்கிறது.

பொதுவாக கேமராவில் பதிவு செய்யப்படும் வீடியோவானது, நிறைய போட்டோ இமேஜ்களை வரிசையாக உள்ளடக்கி தான், ஒரு வீடியோ உருவாக்கப்படுகிறது. இப்படி தனித்தனியாக போட்டோ இமேஜ்கள் ஸ்டோர் செய்யப்படுவதால் நமக்கான ஸ்பேஸ் கிடைப்பதில்லை. இந்த குறையை போக்குவதற்காக மெட்ரோ பிளாக் எனும் டெக்னாலஜியை பயன்படுத்தி HEVC H. 265 கொடக் பயன்பாட்டிற்கு வந்துள்ளது. இதன் மூலம் வீடியோவை பதிவு செய்யும்போது, அசையும் பகுதி அசையாத பகுதி என்று இரண்டாக பிரித்து இதில் அசையாத இமேஜ்களை ஒரு டேட்டா வாகவும், அசையும் இமேஜ்களை ஒரு டேட்டாவாகவும், டிஜிட்டலாக மாற்றி, சுருக்கி (கம்பிரஸ்) செய்துகொள்வதால் 4K வீடியோக்களுக்கு H. 265 அவசியமான ஒன்றாக மாறிப் போயுள்ளது.

அதிகமான பேண்ட்விட்த், இன்டர்நெட் லைவ் ஸ்ட்ரீமிங், HDR போன்ற டைனமிக் ரேஞ்ச் பைல்களுக்கு H.265 ஏற்புடையதாக இருக்கிறது.

H. 265 பொறுத்தவரை பல்வேறு தொழில்நுட்ப நிறுவனங்கள் சேர்ந்துதான் இதை உருவாக்கியுள்ளது. எனவே இந்த கொடக் ஐ பயன்படுத்துவோர் கண்டிப்பாக லைசென்ஸ் வாங்க வேண்டிய அவசியம் ஏற்படும். இதனால் அமேசான் (VP9), யூடியூப்(AV1)போன்ற நிறுவனங்கள் தங்களுக்கென்று தனித்தனியாக கொடாக்கு களை உருவாக்கிக் கொண்டுள்ளன. என்றாலும் HEVC & H.265 கொடாக் சக்சஸ் ஆகும் என்று அனைவரும் நம்புகின்றனர்.

## 8 PIT V/S 10 PIT

கேமராக்களில் எடுக்கப்படும் போட்டோக்கள் எல்லாம் சிகப்பு, பச்சை, நீலம் ஆகிய மூன்று வண்ணங்களை அடிப்படையாகக் கொண்டுதான் இமேஜ்கள் பதிவு செய்யப்படுகின்றன. தற்போது வெளிவரும் கேமராக்களிலும் இந்த வண்ண மாற்றுமுறை 8 Pit அல்லது 10 Pit என மாற்றம் செய்யப்பட்டு வருகிறது. பொதுவாக இந்த Pit எனப்படுவது வண்ணங்களின் மதிப்பை எண்ணிக்கை அடிப்படையில் பிரித்து மெமரி கார்டில் சேமித்து வைக்கிறது.

பொதுவாக கம்ப்யூட்டர் அல்லது கேமரா என எதுவாக இருந்தாலும் 0 -1 என்கிற டிஜிட்டல் எண்ணிக்கையை கணக்கு வைத்துத்தான் தகவல்கள் சேமிக்கப்படுகின்றன. அதாவது 8Pit க்கு 00000000 & 11111111 >256 என்றும், இப்படி சிகப்பு, பச்சை, நீலம் என்று ஒவ்வொரு (RGB )வண்ணங்களில் உள்ள ஷேடோ மதிப்பானது 256 என்று இருக்கும். இதைப்போல 10 Pit க்கு 0000000000 - 1111111111 -›1024 என்று ஒவ்வொரு வண்ணங்களிலும் 1024 என்கிற மதிப்பில் இருக்கும். அதாவது 8 Pit ல் 16.7 மில்லியன் வண்ணங்கள் இருக்கும். 10 Pit ல் 1 பில்லியன் அளவை தாண்டி வண்ணங்கள் இருக்கும்.

8 Pit ல் மில்லியன் கணக்கில் வண்ணங்கள் இருந்தாலும், Post & Production செய்யும்போது இமேஜ்களில் அதிகமாக வண்ணங்களை கூட்டவோ அல்லது குறைக்கவோ சற்று சிரமமாக இருக்கும். 10 Pit ல் வண்ணங்களை post & production செய்யும் போது இந்தப் பிரச்ச னை அதிகம் இருக்காது. இதை நம்மால் எளிதில் உணரமுடியும்.

# மாநில சங்க செயற்குழுக் கூட்டத்தில் ஏழு முக்கிய தீர்மானங்கள்

கொரோனா அச்சம் காரணமாக தள்ளிப் போடப்பட்டு இருந்த மாநில சங்கத்தின் செயற்குழு கூட்டம் கடந்த மாதம் கொடைக்கானல் ஹோட்டல் சம்மரில் நடைபெற்றது. இக் கூட்டத்திற்கு மாநில தலைவர் மாதேஸ்வரன் அவர்கள் தலைமை தாங்கினார். மாநில பொதுச் செயலாளர் சி வகுமார் அவர்கள் செயலாளர் அறிக்கையை வாசித்தார்.

கொரோனா தொற்று நெருக்கடி காலத்தால் நடத்த இயலாமல் போன மாநில சங்க பொதுக்குழு மற்றும் தேர்தல், 2010ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட மாநில சங்க தொழிற்சங்க பதிவு புதுப்பித்தல், வரும் காலங்களில் தமிழகத்தில் நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தல் 2021 வீடியோ ஒளிப்பதிவு பணிகளை மாநில சங்கத்தின் சார்பாக பெறுவது, மாவட்ட சங்கங்கள் மாநிலச் சங்கத்திற்கு செலுத்த வேண்டிய ஆண்டு சந்தா மற்றும் பொதுக்குழு உறுப்பினர் நுழைவு கட்டணம் வசூலிப்பது, உயிர் நீத்தோர் உதவித்தொகை வழங்குவது உள்ளிட்ட இதர விஷயங்களின் மீது நடைபெற்றவிவாதங்களின்அடிப்படையில் கீழ்கண்ட தீர்மானங்கள் செயற்குழுவில் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 1:**

செயற்குழுவில் கலந்து கொண்ட மாவட்டங்கள் இடம் மாநில சங்கத்தின் பொதுக்குழு மற்றும் தேர்தல் நடத்துவது குறித்து கருத்து கேட்கப்பட்டது பெரும்பான்மை அடிப்படையில் வருகின்ற 2021 ஆகஸ்ட் செப்டம்பர் மாதத்தில் மாநில பொதுக்குழு மற்றும் தேர்தலை நடத்தலாம் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 2:**

எதிர்வரும் மாநில பொதுக்குழுவில் மாவட்ட சங்கங்கள் சந்தா தொகை செலுத்தும் போது கட்டாயமாக மாவட்ட சங்கத்தின் உறுப்பினர் பட்டியலை வழங்க வேண்டும். உறுப்பினர் பட்டியலை மாவட்ட ச ங்கங்கள் மாநில சங்கத்திடம் வழங்கினால் மட்டுமே மாவட்ட சங்கங்கள் பொதுக்குழு கூட்டத்தில் மாநில சங்க தேர்தலில் வாக்களிக்கவும் அனுமதிக்கப்படும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 3:**

மாநிலச் சங்கத்திற்கு எதிராக செயல்படும் எந்த ஒரு அமைப்புகளுடனும் மாநில சங்க நிர்வாகிகள் மாவட்ட சங்க நிர்வாகிகளும், தவிர சங்க உறுப்பினர்கள் தொடர்பு வைத்துக் கொள்ளக் கூடாது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 4:**

மாநிலசங்கம்2010ஆம்ஆண்டுபதிவுசெய்த மாநில சங்க தொழிற்சங்க பதிவை மீண்டும் புதுப்பிக்க நடவடிக்கை மேற்கொள்வது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 5:**

மாவட்ட சங்கங்களின் தேர்தலில் மாநில சங்க நிர்வாகிகள் தேர்தல் பார்வை யாளர்களாக மட்டுமே கலந்து கொள்வது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 6:**

2020 ஆம் ஆண்டுக்கான மாநில சந்தா தொகையில் ஒரு நெருக்கடி நிலையை கருதி மாநில சங்கம் மாவட்ட சங்கங்களிடம் ஆண்டு இணைப்பு கட்டணமான ரூபாய் 3000 மட்டும் வசூல் செய்வது எனவும் மாநில சங்க பொதுக்குழு உறுப்பினர் நுழைவு கட்டணமாக ரூபாய் 9000 ஐ தள்ளுபடி செய்வது எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது 2020 மட்டுமே பொருந்தும்.

தீர்மானம் 7:

மாநில சங்கத்தின் உயிர் நீத்தோர் உத வித்தொகை வழங்கும் திட்டத்தில் நிதி வேண்டி மாவட்ட சங்கங்கள் அளித்துள்ள பரிந்துரைகளை பெற்றுக் கொள்வது எனவும் இது குறித்து பொதுக்குழுவில் பரிசீலித்து முடிவு செய்யப்படும் எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# கொரோனாவிற்கு ஊரடங்கிற்குப் பின் புகைப்பட கலைஞர்கள்

இந்திய அளவில் பிறப்பிக்கப்பட்ட கொரோனா பொது சுகாதார கட்டுப்பாடு சட்ட விதிகளில் இருந்து, ஒளிப்படத் துறை மீளுவதற்கு 10 மாத காலம் வரை நமது ஒளிப்படக் கலைஞர்கள் அனைவரும் அமைதி காத்தார்கள். அதுநாள் வரை தங்கள் வாழ்வாதாரத்தை இழந்துவிட்ட ஒளிப்படக் கலைஞர்கள், பொருளாதார ரீதியாக மிகவும் பின்னுக்குத் தள்ளப்பட்டு இருந்தனர். ஒரு வருடத்தின் வருமானத்தை மொத்தமாக இழந்து விட்ட இந்த கலைஞர்களுக்கு 2021 ஆம் ஆண்டு தை மாத முகூர்த்த நாட்கள் ஓரளவிற்கு நம்பிக்கை ஏற்படுத்தும் விதமாக அமைந்திருந்தன என்றுதான் சொல்ல வேண்டும்.

இந்த சீசனில் அனைவருக்குமே தொழில் செய்வதற்கான வாய்ப்புகள் சமமாக கிடை க்கவில்லை என்கிற குற்றச்சாட்டு பரவலாக இருந்தது. ஆனாலும் இந்த குற்றச்சாட்டை பொய்யாக்கும் விதத்தில் பல இடங்களில் கேமராதட்டுப்பாடு இருந்தது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. நீண்ட வருடங்களுக்குப் பிறகு இப்படி ஒரு நிலைமை ஏற்பட்டது கண்டு அனைவரும் ஆச்சரியப்பட்டனர். தொடர்ச்சியான கவரேஜ்களால் நமது கலைஞர்கள் சற்று களைப்பாக இருந்தாலும், மிகவும் நம்பிக்கையுடன் அனைத்தையும் எதிர்கொண்டார்கள். கொரோனாகாலத்திற்குப் பின் ஒளிப்பட தொழிலில் அதிக மாற்றங்கள் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் பிரதிபலிப்பை இப்போதே பல இடங்களில் காண முடிகிறது.

இன்றைய திருமணங்களில் கேண்டிட் ஒளிப்படக் கலைஞர்கள் ஆதிக்கம் அதிகரித்து காணப்படுகிறது. இது இன்றைய மணமக்களின் நாகரீக மாற்றமாக மாறிப் போயுள்ளது. இன்றைய இளம் ஒளிப்பதிவாளர்கள் புதிய தொழில்நுட்ப மாற்றத்தை மிகச் சரியாக புரிந்து கொண்டு அதை மக்களிடம் முறையாக கொண்டுபோய் சேர்த்துள்ளனர் என்று அனுபவம் வாய்ந்த புகைப்பட வல்லுனர்கள் இந்த இளம் ஒளிப்பதிவாளருக்கு அளிக்கின்றனர்.




# HARD DISK DATA RECOVERY

(World Class Data Recovery Tools)

## HARD DRIVE CRASHED


## NO WORRIES





## WE CAN RECOVER DATA

Recover data from damaged /broken Hard Drives



Advanced CLASS 100 CLEAN ROOM for recovering data from Physically Damaged Hard drives

(100% Data Security & Privacy Gurantee)

**VISUAL COMPUTER**

48/51,Mookathal Street,Purasawakkam,
Chennai- 600 007.

**99405 37049**

**M. RAJESH**

# Selfie Photo Booth ◆ Magic Mirror Booth

## Sales and Rental




Chennai Selfie Photo Booth

- Slim Type New Model
- 60 In Magic Mirror
- 32 In Multi Touch display
- i3 Configuraion NUC PC
- Canon 1300D DSLR Camera
- FUJI ASK 300 THERMAL Printer

₹.2,50,000 Only

உங்களின் செல்பி புகைப்படம் பிரிண்ட்டுடன் உடனுக்குடன்

புகைப்படம் எடுத்த உடன் பேஸ்புக் , டுவிட்டர், மற்றும் இ மெயிலில் பகிர்ந்துக் கொள்ள முடியும்.



Prop. A.Loganathan -
Shadow Digital Studio
9941430991
9710220000

148, Prithvi Apartments, Perambur Barracks Road,
(Opp. Old Vasanthi Theatre), Purasawalkam, Chennai - 600 007.
E-mail : chennaiselfiephotobooth@gmail.com
www.chennaiselfiephotobooth.com

JVC

AUTHORIZED SUPPLIER




**Kelaish Electronics Pte Ltd**

28 Kallang Place, #05-07, Singapore 339158.
Tel: +65 6348 0771, Fax: +65 6348 0772
Email: kelaish@kepl.sg, Website: www.kepl.sg

Contact Person: Mr. Amar Pangare
Mobile/ WhatsApp: +65 9752 4170
Skype: amarpangare30, Email: amar@kepl.sg

**CVPA NEWS** (Tamil & English ) Monthly Newspaper,
**RNI No. TNBIL / 2005 / 15261 (R.Dis no.1834/04)**

Published by **B.SRIDAR,** on behalf of
**Chennai Video & Photographers' Association,**
at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 2860 7821
Email : cvpanews2005@gmail.com, Website : www.cvpa.in
Printed by **M.NAVANEETHAN,** at **Nava Jothi Achagam,**
No.8. Muktharunnissa Begum St, Ellis road, Chennai-2.
Editor : **B.SRIDAR,** Mobile: 8015170351

**If undelivered please return to**
**Chennai Video & Photographers' Association,**
**at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 28607821**

Postal Registration no TN/ARD/11/2021-2023 WPP License No: TN/PMG/CCR/WPP 557/2021-2023
Posted at Egmore RMS/I (Partika Channel) Posted on 13.02.2021

**To**